[1974 சனவரி 24

விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கான உதவித்தொகை.

*131 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுதிகளில் தங்கிப் படிக்கும் அரிசன கல்லூரி மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகையை (Residential Scholarships) உயர்த்தித்தரும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தற்போது இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : இப்போது எவ்வளவு தொகை அளிக்கப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தினால் அந்தத் தொகையை இனியாவது உயர்த்தித்தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1960-ம் ஆண்டில் இருந்து குறைந்த பட்சமாக அளிக்கப்பட்டு வந்ததை 1971-72 இல்தான் நாம் உயர்த்தினோம். அந்த விவரத்தை நான் கூற விரும்புகிறேன். கலை, விஞ்ஞானம், சட்டம் ஆகிய படிப்புக்கு—சென்னையில் 1971-க்கு முன்னால் கொடுக்கப்பட்டது ரூ. 60. 1971-72-இல் நாம் ரூ. 70 ஆக உயர்த்தினோம். வெளியில் 50 ஆக இருந்ததை 55 ஆக உயர்த்தினோம். மருத்துவம், பொறியியல் ஆகியவற்றுக்கு, முன்பு சென்னையில் 70 ; அதை 75 ஆக உயர்த்தினோம். வெளியில் 70 ஆக்கினோம். உளவியல்—70 ஆக்கினோம், எம்.எஸ்.சி., எல்.சி.இ. ஆகியவற்றுக்கு சென்னையில் 50 ஆக இருந்ததை 60 ஆகவும், வெளியில் 45 ஆக இருந்ததை 50 ஆகவும் 1971-72-இல் தான் உயர்த்தியிருக்கிறோம்.

திரு. கு. காமாட்சி : கொடுக்கிற தொகையை, விடுதியில் உள்ள மாணவர்களே ஒரு குழு அமைத்துக்கொண்டு செயல்படும் வகையில், அவர்களிடத்திலேயே கொடுத்தால் அவர்களே தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி, டிவைடிங் சிஸ்டத்தில் செலவைப் பகிர்ந்துகொள்ள, அரசு ஆவன செய்ய முன்வருமா ?

1974 சனவரி 24]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கல்லூரியில் இருக்கிற விடுதிகளில் இந்த முறைதான் இருக்கிறது. அரசினர் தனியாக நடத்துகிற விடுதிகளில்தான் மாவட்ட நல அதிகாரிகள் அதனைக் கவனித்துக்கொள்கிறார்கள். இதை எடுத்தால் அதிகப்படியான பணம் தேவைப்படும்.

திரு. எஸ். வடிவேல் : மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித்தொகை உயர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் வயிறு நிறைவது இல்லையே. ஆகவே அரசே விடுதிகளை ஏற்றுக்கொண்டு அதற்காகும் செலவை ஏற்று, படிக்கிற மாணவர்களுக்குப் போதுமான உணவை அளிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கல்லூரிகளில் உள்ள விடுதிகளில் மாணவர்கள் டிவைடிங் சிஸ்டத்தில் தங்களுக்கான உணவுப்பொருள்களை மெனு போட்டுக் கொண்டு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இதனால் செலவு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது. அங்குள்ள அரிசன மாணவர்களுக்கு நாம் கொடுக்கிற உதவித்தொகை குறைவாகவே இருக்கிறது. அரசே முழுத்தொகையும் கொடுப்பது என்பதும் சாத்தியம் அல்ல. ஆகவே விடுதியில் உள்ள மாணவர்களே சிக்கனமாக உணவுக்காகும் செலவை கட்டுப்பாடாக வைத்துக்கொள்ள முன்வந்தால் அது எல்லோருக்குமே பயன்தரும்.

புலவர் சி. பழனிச்சாமி : விடுதிகளில் தங்கிப்படிக்கிற மாணவர்களுக்கு உணவுக்காக நாம் ஒருநாளைக்கு 1½ ரூபாய்தான் தருகிறோம், அதை 2½ ரூபாயாக உயர்த்தித்தர அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1971-72-இல் இருந்து நாம் மொத்தமாக ரூ. 70, 75 என்றுதான் கொடுக்கிறோம். உணவுக்காக என்று தனியாக எதுவும் கொடுப்பது கிடையாது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சில மாணவர்களுக்கு, விடுதியிலே தங்கி படிக்கின்றபொழுது, கல்லூரி வெகு தூரமாக இருந்தால், அவர்கள் போக்குவரத்துக்கு அரசாங்கம் உதவி செய்கிறது. அதை அகற்றிவிட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாகவே பஸ்ஸில் செல்ல அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 24

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பஸ்ஸிலே இலவசமாகச் செல்கின்ற வசதியை இப்பொழுது செய்துதர முடியாது. ஆனாலும் விடுதிகளிலேயிருந்து கல்லூரிகள் நெடுந்தொலைவில் இருந்தால் அவர்களுக்குப் போக்குவரத்துக்கான பஸ் செலவை, சில விடுதிகளில்—அதாவது, விடுதிகளிலிருந்து நெடுந்தொலைவில் கல்லூரிகள் இருந்தால், அவ்விடுதிகளில்—படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் தருகிறது. ஆனால் விடுதிக்கு அருகில் பள்ளியோ, கல்லூரியோ இருக்குமானால் அந்த மாணவர்களுக்குப் போக்குவரத்துச் செலவு தரப்படவில்லை. இதை அறியாத சில மாணவர்கள் கல்லூரியிலிருந்து தூரமான இடத்தில் விடுதிகளை உடைய மாணவர்கள் கேட்கின்ற உதவித் தொகையைப் போல் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அது சரியல்ல என்றுதான் அரசு கருதுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிறித்துவ அரிசனங்கள்.

*132 வினா—**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிறித்துவ அரிசனங்களை (சாம்பவர்கள்) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 22—9—1973 தேதியிட்ட அரசு ஆணை எண் (பலவகை) 853, சமூக நலம் உத்தரவின் மூலம் கிறித்தவ அரிசனங்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர். இதன் காரணமாக அரிசன கிறித்துவர்கள், அனைவருக்கும் முன்பு இருந்தது போலவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ளவர்களுக்கு மாநில அரசினரால் அளிக்கப்படும் கல்விச் சலுகைகள் கிடைக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சாம்பவ அரிசன கிறித்துவர்களும் பயன்பெறுவர். ஆகவே அவர்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு எதும் அரசின் ஆய்வில் இல்லை.